2024 பிப்ரவரி 15]

முழுவதும் உள்ள அங்கன்வாடி மையங்களிலுள்ள மாணவச் செல்வங்களின் பாதுகாப்புக்காக சுற்றுச்சுவர், gate போன்றவற்றை அமைப்பதற்கு மாண்புமிகு அமைச்சர் அவர்கள் ஆவன செய்வார்களா என அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு சமூக நலன்-மகளிர் உரிமைத் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திருமதி பி. கீதா ஜீவன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் திரு. கடம்பூர் ராஜூ அவர்களின் கோரிக்கைபடி சுற்றுச்சுவர் மற்றும் பாதுகாப்பு வசதி செய்ய இந்த அரசு நடவடிக்கை எடுக்கும்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *வினா வரிசை எண் 23, மாண்புமிகு உறுப்பினர் திரு. நிவேதா எம். முருகன், மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள்.*

23—

பேருந்து வசதி

***58255—திரு. நிவேதா எம். முருகன்:**

மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

பூம்புகார் தொகுதி, பொறையாரிலிருந்து தரங்கம்பாடி, மாணிக்கப்பங்கு, வாணகிரி, பூம்புகார், பழையாறு மற்றும் கொள்ளிடம் ஆகிய மீனவக் கிராமங்கள் வழியாக சிதம்பரத்திற்கு பேருந்து இயக்க அரசு முன்வருமா?

மாண்புமிகு திரு. எஸ்.எஸ். சிவசங்கர், போக்குவரத்துத் துறை அமைச்சர்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,*

மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் வைத்த கோரிக்கை நிறைவேற்றப்பட்டு அந்த வழித்தடத்தில் பேருந்து இயக்கப்பட்டுவிட்டது என்பதை சபைக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. நிவேதா எம். முருகன் அவர்கள்.*

[2024 பிப்ரவரி 15

திரு. நிவேதா எம். முருகன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, எனது பூம்புகார் தொகுதி மக்களின் பல்லாண்டு கால கோரிக்கையை ஏற்று, பொறையாரிலிருந்து தரங்கம்பாடி, சின்னங்குடி, வாணகிரி, பூம்புகார் வழியாக சீர்காழிக்குப் புதிய பேருந்து சேவையை வழங்கிய திராவிட நாயகர் மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுக்கும், (மேசையைத் தட்டும் ஒலி) அதற்கு வழிவகை செய்த நமது மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்களுக்கும் பயன்பெறுகின்ற எனது தொகுதி மக்களின் சார்பாகவும், மீனவச் சொந்தங்கள் சார்பாகவும் கோடானுகோடி நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

முற்பகல் 10–15

மேலும், மயிலாடுதுறை முதல் வைகல் வரை புதிய பேருந்து சேவை. வழுவூர், மங்கைநல்லூர், அனந்தநல்லூர், கோமல், கொத்தங்குடி, மாந்தை, நக்கம்பாடி, ஸ்ரீகண்டபுரம், பாலையூர், நல்லாவூர், S. புதூர், மேல அகலங்கண், கோனேரிராஜபுரம், சிவனாரகரம், வைகல் வரையிலான புதிய வழித்தடத்தில் பேருந்து சேவை தொடங்கிட அரசு முன்வருமா எனத் தங்கள் வாயிலாகக் கேட்டு அமர்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. எஸ்.எஸ். சிவசங்கர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கோரியவாறு, மயிலாடுதுறை–கோமல், மயிலாடுதுறை–கும்பகோணம் முக்கிய சாலையில் அமைந்துள்ள பகுதியாக உள்ளது. அங்கு அதிக அளவில் பேருந்துகள் இயக்கப்படுகின்றன. மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் அங்கிருந்து உள்ளே செல்வதற்கு பேருந்து வசதிகள் வேண்டுமென்று கேட்கிறார்கள். துறை அதிகாரிகள்மூலம் ஆய்வு மேற்கொண்டு நடவடிக்கை எடுக்கப்படும் என்பதை மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தங்கள் வாயிலாகத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. நிவேதா எம். முருகன் அவர்கள்.

2024 பிப்ரவரி 15]

திரு. நிவேதா எம். முருகன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கோமல் சாலையில் பேருந்துகள் போய்க்கொண்டிருக்கின்றன. ஏற்கெனவே இருக்கின்ற வழித்தடங்களைப்போல், இந்தப் புதிய வழித்தடமும் மக்களின் பயன்பாட்டிற்குத் தேவைப்படுகின்ற காரணத்தால், மாண்புமிகு அமைச்சர் அவர்கள் முன்வந்து உடனடியாகப் பேருந்துகளை இயக்கினால், மக்களுடைய பயன்பாட்டிற்கு ஏதுவாக இருக்கும் என்பதைக் கூறி விடைபெறுகிறேன். நன்றி, வணக்கம்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. எஸ்.எஸ். சிவசங்கர்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினரது கோரிக்கையின்மீது, துறை அதிகாரிகளைக் கொண்டு ஆய்வு செய்து நடவடிக்கை எடுக்கப்படும்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் முனைவர் எம்.எச். ஜவாஹிருல்லா அவர்கள்.*

முனைவர் எம்.எச். ஜவாஹிருல்லா: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, எனது பாபநாசம் தொகுதி, அம்மாப்பேட்டை ஒன்றியம், தேவராயன்பேட்டை கிராமத்தில் 2,500 மக்கள் வசிக்கின்றனர். அந்த கிராமத்திலிருந்து நூற்றுக்கும் மேற்பட்ட மாணவர்கள் கல்வி கற்க கும்பகோணம், தஞ்சாவூர் செல்கிறார்கள். எனவே, தேவராயன்பேட்டையை மையமாகக் கொண்டு, கும்பகோணம், எலத்தூர், ஐயம்பேட்டை மார்க்கெட் வழித்தடத்தில் முன்பு பேருந்து வசதிகள் இருந்தன. தற்போது அந்த வழித்தடத்தில் மீண்டும் பேருந்து வசதிகளைச் செய்வதற்கு மாண்புமிகு அமைச்சர் அவர்கள் முன்வருவார்களா என்று மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாகக் கேட்க விரும்புகிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. எஸ்.எஸ். சிவசங்கர்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் முனைவர் எம்.எச். ஜவாஹிருல்லா அவர்களது பல கோரிக்கைகள் ஏற்கெனவே*

[2024 பிப்ரவரி 15

நிறைவேற்றப்பட்டிருக்கின்றன. இந்தக் கோரிக்கையையும் எழுத்துப்பூர்வமாக அளித்தால், துறைமூலம் ஆய்வு செய்து நடவடிக்கை எடுக்கப்படும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. இ. பரந்தாமன் அவர்கள்.

திரு. இ. பரந்தாமன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வண்டி தடம் எண் 34 Thiruvottiyur–Ambattur, தடம் எண் 7E, Broadway to Ambattur, தடம் எண் 35 Broadway to Ayanavaram ஆகிய பேருந்துகள் அனைத்தும் எழும்பூர் தொகுதி சூளை வழியாகச் செல்கின்றன. இந்த வழித்தடங்களில் கூடுதல் சேவை தேவை என்று பொதுமக்களிடமிருந்து கோரிக்கைகள் வரப்பெற்றிருக்கின்றன. எனவே, இந்த வழித்தடங்களில் செல்லும் பேருந்துகள் கூடுதல் நடைகள் இயக்கப்படுமா என்பதை மாண்புமிகு அமைச்சர் அவர்களிடம் கேட்க விரும்புகிறேன்.

மேலும், 4D என்கின்ற வள்ளலார்நகர்–காயிதேமில்லத் கல்லூரி செல்கிற பேருந்து முன்பு Elephant Gate வழியாகச் சென்றுகொண்டிருந்தது. பாலம் கட்டும் பணிகள் மேற்கொள்ளப்படுவதால், பழைய நடராஜா திரையரங்கம் வழியாகத் திருப்பி இயக்கப்பட்டுக்கொண்டிருந்தது. அந்த இயக்கச் சேவையும் கடந்த 4 ஆண்டுகளாக நிறுத்தப்பட்டிருக்கிறது. எனவே, அந்த 4D பேருந்து மீண்டும் இயக்கப்படுமா என்பதைத் தங்கள் மூலமாக மாண்புமிகு அமைச்சர் அவர்களிடம் அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. எஸ்.எஸ். சிவசங்கர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் இது குறித்து ஏற்கெனவே எழுத்துப்பூர்வமாக என்னிடத்தில் கடிதம் கொடுத்திருக்கிறார்கள். மாநகரப் போக்குவரத்து அலுவலர்களைக் கொண்டு ஆய்வு செய்யச் சொல்லியிருக்கிறேன். அங்கு கட்டப்பட்டுக்கொண்டிருக்கின்ற பாலப் பணிகள் இரண்டு மாத காலத்தில் முடிவடையவிருக்கின்றன. அப்பணிகள் முடிவடைந்த பிறகு, இந்தப் பிரச்சினைகள் அனைத்தும்

2024 பிப்ரவரி 15]

தீர்க்கப்படும். அவர் என்னிடத்தில் அளித்த கடிதத்தினை Twitter-லும் போட்டிருக்கிறார்கள். அவரது தொகுதி மக்கள் பார்த்திருக்கிறார்கள். பணிகள் நிறைவடையும்போது அவரது தொகுதி மக்கள் நிச்சயமாக அவரை வாழ்த்துவார்கள் என்பதை இந்த நேரத்தில் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. மா. செந்தில் குமார் அவர்கள்.

திரு. மா. செந்தில் குமார்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வணக்கம். மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவர் அண்ணன் திரு. எடப்பாடியார் அவர்களுக்கும், மாண்புமிகு எதிர்க்கட்சித் துணைத் தலைவர் அண்ணன் அவர்களுக்கும் வணக்கத்தைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

கள்ளக்குறிச்சி அரசு கலை மற்றும் அறிவியல் கல்லூரி புதிதாகத் திறக்கப்பட்டு, கிட்டத்தட்ட 1,500 மாணவர்கள் பயின்று வருகிறார்கள். அவர்களின் போக்குவரத்து வசதிக்காக, பேருந்து ஏதும் அப்பகுதியில் இயக்கப்படவில்லை. சென்ற சட்டமன்றக் கூட்டத் தொடரிலும் இது சம்பந்தமாக மாவட்ட பொறுப்பு அமைச்சர் அவர்களிடம் வலியுறுத்திக் கூறியிருந்தேன். அதேபோன்று, அந்த அரசு மருத்துவக் கல்லூரிக்குப் (குறுக்கீடு) பேருந்து இயக்கினீர்கள். ஆனால் அப்பகுதியில் பேருந்துகள் சரியாகப் போகவில்லை. வானாபுரத்திலிருந்து கல்லூரிக்குச் செல்ல வேண்டும்; அரசு மருத்துவக் கல்லூரியிலிருந்து பேருந்து நிலையத்திற்குச் செல்வதற்கு போதுமான அளவில் பேருந்து வசதிகள் இருந்தால் மட்டும்தான் மாணவர்கள் எளிதில் கல்லூரிக்குச் செல்ல ஏதுவாக இருக்கும். கிட்டத்தட்ட ரூ.300/– ரூ.400/– என்று ஆட்டோவிற்கு கொடுத்துதான் அங்குள்ள சாதாரண ஏழை எளிய மாணவர்கள் கல்லூரிக்குச் சென்று வருகிறார்கள்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: எங்கு பேருந்து வசதி வேண்டுமென்று தெளிவாகக் கேள்வி கேட்கவும்.

திரு. மா. செந்தில் குமார்: கிட்டத்தட்ட 1,500 மாணவர்கள் பயிலும், புதிதாகத் திறக்கப்பட்டுள்ள அரசு கலை மற்றும் அறிவியல் கல்லூரிக்குப் போதுமான அளவில் பேருந்துகள் இயக்கப்பட வேண்டும். இதற்கு முன்பேயும் சொல்லியிருக்கிறேன்.

[2024 பிப்ரவரி 15

முற்பகல் 10–20

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மருத்துவமனை மற்றும் மருத்துவக் கல்லூரிக்கு* bus *வேண்டும். மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. எஸ்.எஸ். சிவசங்கர்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு நெடுஞ்சாலைத் துறை அமைச்சர் அண்ணன் திரு. எ.வ. வேலு அவர்கள், அந்த மாவட்டத்தின் பொறுப்பு அமைச்சர். ஏற்கெனவே, அவர்கள் அதுகுறித்தும் பேசியிருக்கிறார்கள். அதேபோல, மாவட்ட கழகச் செயலாளர், ரிஷிவந்தியம் தொகுதி சட்டமன்ற உறுப்பினர் திரு. வசந்தம் கார்த்திகேயன் அண்ணன் அவர்களும் பேசியிருக்கிறார்கள். வானாபுரத்தை ஒரு வட்ட தலைநகராக்கியிருக்கிறோம். அங்கே ஒரு பணிமனை வேண்டும் என்றும் கேட்டிருக்கிறார்கள். மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்கு நான் புள்ளிவிவரத்தைச் சொல்கிறேன். ஏற்கெனவே, அந்த மருத்துவமனைக்கு 16 நடைகள் பேருந்துகள் இயக்கப்படுகின்றன. ஏனெனில், ரிஷிவந்தியம் தொகுதி, சட்டமன்ற உறுப்பினர் கொடுத்த கோரிக்கையை மேலாண்மை இயக்குநரிடத்தில் கொடுத்து ஆய்வு செய்தோம். 16 நடைகள் இயக்கப்படுகின்றன. இன்னும் கூடுதல் நடைகள் இயக்குவதற்கு ஆய்வு செய்யப்படுகிறது. மேலும், 10 நடைகள் இயக்குவதற்கும் புள்ளிவிவரங்கள் தந்திருக்கிறார்கள். அதில் என்ன பிரச்சினை என்றால், 16 நடைகள் இயக்கப்படுகின்றபோதும் பேருந்துகளில் போதிய பயணிகள் இல்லை. 5, 10, 20 பேர்தான் அந்தப் பேருந்தில் பயணிக்கிறார்கள். அதற்குமேல் பயணிகள் வருவதில்லை. நீங்கள் வந்தால் அந்த* record *முழுவதையும் காண்பிப்பதற்கு நான் தயாராக இருக்கிறேன். இருப்பினும் பொதுமக்களின் சிரமங்களைத் தவிர்ப்பதற்கு, மருத்துவமனைக்குச் செல்வதற்காக, கூடுதலாக 10 நடைகள் இயக்குவதற்கும் நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருக்கின்றன என்பதை அன்போடு தெரிவித்துக்கொள்கிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *வினா வரிசை எண் 24, மாண்புமிகு உறுப்பினர் திரு. செ. ஊர்வசி அமிர்தராஜ், மாண்புமிகு இந்து சமயம் மற்றும் அறநிலையத் துறை அமைச்சர் அவர்கள்.*